# கடற்கரை கவியரங்கு– 650

நாள்: 01-06-2025

# அறிக மனமே அறிக!

கூடுவதும் விலக்குவதும் கோலமிடும் மதியோ!
வாடுவதும் வருந்துவதும் வாழ்வுதரும் நிதியோ!
தேடுவதும் ஓடுவதும் தெய்வம் தந்த விதியோ!
ஆடுவதால் வாடுவதால் ஆகும்பயன் என்ன?

காடும்மேடும் திரியுமவை கலங்குவதே இல்லை!
காலமென கனவு செய்யும் மானுடர்க்கே தொல்லை!
காலனென கற்பித்துக் கதைகள் பல வுண்டு!
கோலமிடும் வாழ்வு தன்னில் குழப்பமது ஏனோ!

சீலமென வாழ்ந்தாலும் சிறுமையுடன் வாழ்ந்தாலும்,
காலம் நம்மை விட்டுவைப்ப தொருநாளும் இல்லை!
மூலமென்றும் முடிவு என்றும் முகிழும் கதைகள் உண்டு!
ஓலமிட்டு வாழ்ந்தாலும் ஓசையின்றி வாழ்ந்தாலும்,

காலமொருநாள் நம்கதையை முடித்துவிடும் அழகாய்!
வாளெட்டுத்துப் போரிடத்தான் வகையேதும் உண்டோ?
வாடாது உயிர்நீங்கும் வாழ்க்கை எவர்க்கும் இல்லை!
வாழாது வாழ்ந்தாலும் வாசல்வரை தான் உறவு!

மீளாது துயர் என்று மேதினியில் பலர் சொல்வர்!
ஆளாது அவரும் ஒருநாள் அவனிவிட்டுச் செல்வர்!
ஆனாலும் யாரறிவோம் வந்தயிடம் போகுமிடந்தன்னை?
கோனாகி பலரிங்கே கொட்டும் கதைபலவும் உண்டே!

கோளதனின் சுழற்சியதே வாழ்க்கையிது என்பார்!
தாளாத துயருக்கெல்லாம் முற்பிறவியென தரவாகும்!
தாளமிட்டுக் கதைசொல்ல தரணியில்அவர்புகழ் பரவும்!
மீளாது நம்மறிவும் மேய்ச்சல்தேடி வாழ்ந்து விடும்!

- **கவிஞர் கவிவளவன்** ஆகிய
- **கு.ப. அசோகன்.**
- 01-06-2025 (மாலை 3-00 மணி)